சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
திங்கட்கிழமை 21.05.2021
supeedsam.com
supeedsam@gmail.com




A.Puwanesh
Y.RAJ GOLDSCHMUCK
SPECIALIST IN JEWELLS MAKING & REPAIRING
Tel & Fax : 071 298 17 29
Handy : 079 590 91 98
Bruggwaldstasse 112 9300 Wittenbach Switzerland


## கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களில்
# இறந்து கரையொதுங்கும் கடலாமைகள், டொல்பின்கள்




### மக்கள் பீதியில்; கடலுணவுகள் தவிர்ப்பு

(நமது நிருபர்கள்)

கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களிலும் கடற்கரைப்பிரதேசங்களில் பரவலாக இறந்த கடலாமைகள் டொல்பின்கள் மீன்கள் கரையொதுங்கி வருகின்றன. அவற்றுக்கு உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதன் முடிவுகள்

02 ஆம் பக்கத்தில்...

### அடக்கப்படும் தமிழர்கள் ஒன்றிணையுமாறு கருணாகரம் அழைப்பு



(கணிதன்)

தமிழ் மக்கள் மீண்டும் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகின்றமைக்கு எதிராக குரல் கொடுக்க தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென தமிழ் தேசிய

02 ஆம் பக்கத்தில்...

### டக்ளஸ் வாய் திறக்காதது ஏன்? சாணக்கியன் எம்.பி.கேள்வி



(சுபீட்சம் நிருபர்)

மூன்றில் இரண்டு பங்கு கரையோர பிரதேசத்தை வைத்து மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மக்களின் நலன் கருதி எரிபொருள் விலை அதிகரித்ததை பற்றி இது வரை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

02 ஆம் பக்கத்தில்...

### நாவலடி கடற்கரையில் கரையோதுங்கிய கடலாமை



(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு நாவலடி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கடலாமையொன்று கரையொதுங்கியுள்ளது.

மட்டக்களப்பு நாவலடி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடலாமையொன்று கரையொதுங்கியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

### கொரோனா காலத்திலும் இப்படியும் ஒரு மோசடி திருமலையில் சம்பவம்

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா உலர் உணவுப் பொருட்கள் குறிப்பிட்ட நபர் ஒருவரால் கொடுப்பதைப் போல படப்பிடிப்பு நடத்தப்பட்ட காணொளி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்ற

02 ஆம் பக்கத்தில்...

### சாணக்கியனின் கோரிக்கைக்கு பலன் கிடைத்தது திக்கோடை வைத்திசாலையில் விரைவில் சிகிச்சை

(சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு திக்கோடை வைத்தியசாலையில் விரைவில் சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு திக்கோடை வைத்தியசாலை கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும், மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படாமை குறித்து சுகாதார அமைச்சரின்

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
வருமான வரிப்படிவம் நிரப்புதல் 60 CHF மட்டுமே
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


### முன்னாள் போலிஸ் உத்தியோகத்தர் கோரோனாவுக்கு பலி

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி

02 ஆம் பக்கத்தில்...

### மயிலத்தமடு மாதவனை மேய்ச்சற் தரையின் தற்போதை நிலை குறித்து ஆராய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் விஜயம்



(சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான மேய்ச்சற்தரையாக விளங்கும் மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் பிற மாவட்டத்தவரின் அத்துமீறிய சேனைப்பயிர்செய்கை செயற்பாடுகள் மீண்டும் மீண்டும் தொடர்ந்தவண்ணம் உள்ளமை

02 ஆம் பக்கத்தில்...

### தூக்கில் தோங்கிய மகன்: தாய் அதிர்ச்சியில் மரணம்

(ஏறாவூர் நாஸர்)

வீட்டில் மகன் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டதை பார்த்த தாயார் அதிர்ச்சியில் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள

02 ஆம் பக்கத்தில்...

### மரண வீட்டில் ஒன்றுகூடுவதை நிறுத்துங்கள் கூட்டம் கூடுவதையும் நிறுத்துங்கள்
#### மீறுவோர் மீது கடும் நடவடிக்கை; மட்டு.அரச அதிபர் அறிவிப்பு



(அமிர்தகழியான்)

மரண வீட்டில் பத்து தினங்கள் ஒன்றுகூடுவது, தேவையற்ற கூட்டங்களை கூட்ட வேண்டாம் என்ற அறிவித்தல் பொதுச்சுகாதார பரிசோதகர்

02 ஆம் பக்கத்தில்...


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் இலங்கை.
ஸ்தாபகர் அமையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206



கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
சுவிசில் உள்ள மிகப்பெரிய கடன் வழங்கும் வங்கிகளின் நேரடி அங்கீகாரம் பெற்ற நேர்மையான ஒரே நிறுவனம்
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.
Kamal GmbH
Kamal Kredit & Hypothek
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com


### திருகோணமலையில் திருடர்கள் குழு கைவரிசை

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக போக்குவரத்து தடையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பல திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் திருகோணமலை

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: Cicero




SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


### மாணவனுக்கு எமனான கயிறு

நிந்தவூர் அரசாடிதோட்டம் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் விளையாடும்போது கயிற்றில் கழுத்து இறுகிய நிலையில் பரிதாபகரமாக

02 ஆம் பக்கத்தில்...

## தூக்கில் தொங்கிய மகன்; தாய் அதிர்ச்சியில் மரணம்

ஐயங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஞானப்பிரகாசம் மைக்கல் என்பவரும் அவரின் தாயாரான 70 வயதுடைய ஞானப்பிரகாசம் பாக்கியம் என்பவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டவர் புதூர் பிரதேசத்தில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்ததுள்ளார். இரண்டு தினங்களுக்கு முன்னர் மனைவியுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி ஏறாவூர்ஐயங்கேணியிலுள்ள அவரது தாயார் தனிமையில் வாழ்ந்து வரும் வீட்டிற்கு சென்று தங்கியுள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான நேற்று பகல் 11 மணியளவில் மகனை காணவில்லை என தாயார் தேடிய நிலையில், அறைக்கதவு பூட்டப்பட்டுள்ளதையடுத்து உறவினர்களின் உதவியுடன் அறைக்கதவை உடைத்து உட்சென்றபோது அங்கு மகன் கூரையில் கயிற்றில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டதை கண்டுள்ளார்.

இதனையடுத்து புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவரது தாயா ருக்கு அதிர்ச்சியில் சில மணி நேரத்தில் மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து அவரும் உயிரிழந்துள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதில் உயிரிழந்த இருவரது உடல்களும் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மாணவனுக்கு எமனான கயிறு

உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் குறித்த சிறுவன் காலை வீட்டுக்கு அருகில் இருந்த பலாமரத்தில் கயிறு கட்டி விளையாடும் போது தவறுதலாக கயிறு இறுகி மரணமடைந்துள்ளார்

இவரது ஜனாசா நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசீலனையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## நாவலடி கடற்கரையில்

இவ்வாறாக இறந்த நிலையில் கடலாமையொன்று கரையொதுங்கி உள்ளதாக அப்பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்கள் வனஜீவராசிகள் அலுவலகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கல்லடி வனஜீவராசிகள் அலுவலகத்தின் அதிகாரி குறித்த இடத்திற்கு விரைந்து உயிரிழந்த கடலாமையை மீட்டு, கடல்வாழ் உயிரினங்களை அம்பாரை வனஜீவராசிகள் மிருக வைத்திய பிரிவிற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் குறித்த உடற்கூற்று அறிக்கை தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற் தரையின் தற்போதை நிலை

தொடர்பில் அவதானங்களை மேற்கொள்வதற்காக நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அவ்விடம் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதியுடன் அங்கிருந்து சேனைப் பயிர்ச்செய்கையாளர்கள் விலகிச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோடு, கடந்த மே 12ம் திகதி மீண்டும் வழக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் கொரோனா நிலைமை காரணமாக வழக்கு பிற்போடப்பட்டிருந்தது.

இருப்பினும் அத்துமீறிய சேனைப்பயிர்ச்செய்கையாளர்கள் இதுவரை அங்கிருந்து முற்றாக விலகவில்லை எனவும் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அவ்விடத்தை மேய்ச்சற்தரையாகப் பயன்படுத்தும் பண்ணையாளர்களினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவ்விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் வழக்கு விடயங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களைத் திரட்டும் பொருட்டும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இன்றைய விஜயம் அமைந்திருந்தது.

இதன் போது அத்துமீறிய சேனைப் பயிர்ச்செய்கையாளர்களின் தொடர் செயற்பாடுகள் நிலவுகின்றமை தொடர்பிலும், இன்னும் அவர்கள் முழுமையாக வெளியேறவில்லை என்பதும், பசளை பொருட்கள் அங்கு அடுக்கப்படடு இருப்பது போன்ற விடயங்களை அங்கு அவதானிக்க முடிந்ததாக இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன்போது அங்கு மகாவலி அபிவிருத்தி பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் வருகை தந்திருந்தனர். இவை தொடர்பில் அவர்களுடனும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துடிரையாடினர்.

தங்களால் இங்கு அவதானிக்க முடிந்த விடயங்கள் தொடர்பில் தாங்கள் வழக்காளிகள் என்ற அடிப்படையில் நீதிமன்றத்திற்கு தங்கள் சமர்ப்பணங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இன்றைய இவ்விஜயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் உட்பட பலரும் சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## திருகோணமலையில் திருடர்கள் குழு கைவரிசை

உவர்மலை பகுதியில் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன இதனை திருட்டுக் கும்பல் ஒன்று குழுவாக சேர்ந்து தொடர்ச்சியாக செய்து வருவதாக தெரிய வருகின்றது. இது தொடர்பாக திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடும் குழுவினர் தனித்தனியாக பிரிந்து வீடுகளை நோட்டமிட்டு தகவல்களை திரட்டுவதாகவும் சாதகமான வீடுகள் இலக்கு வைக்கப்பட்ட பின்னர் சிலர் காவல் காக்க மற்றையவர்கள் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுவதாகவும் தெரிய வருகிறது.

மக்கள் நித்திரையில் ஈடுபடும் மதிய நேரத்தில் சாதாரணமாக வீடுகளுக்குள் நுழைந்து இலகுவாக கிடைக்கக்கூடிய கையடக்கத் தொலைபேசி, பணம் போன்றவற்றை எடுத்துச் செல்வதாகவும் தெரிய வருகிறது. இது தொடர்பில் அப்பகுதி மக்கள் விளிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கோரப்படுகின்றீர்கள்.

இதில் பலர் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஒரு சிலரே பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர் எனவே இவர்களை கைது செய்ய பாதிக்கப்பட்ட அனைவரும் முறைப்பாடுகளை மேற்கொண்டு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒருசில நாட்களுக்கு முன்பும் காந்திநகரில் உள்ள பொதுக் கினறு ஒன்றில் இருந்து மதுபானசாலையில் இருந்து திருடப்பட்ட பெருமளவிலான மதுபானப் போத்தல்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டிருந்தன.

## கொரோனா காலத்திலும் இப்படியும் ஒரு மோசடி; திருமலையில் சம்பவம்

திருகோணமலை மாவட்டத்தில் முக்கிய அரசியல் கட்சியின் முக்கிய பதவிகளில் அங்கம் வகிப்பதாக தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வந்த திருகோணமலை நபர் ஒருவர் கொரோனா அச்சம் காரணமாக முடங்கி கிடக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வருவதாக வெளிநாட்டு உதவிகளை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த முகநூல் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களில் வழங்குவதாக உலர் உணவுப் பொருட்கள் கொடுப்பதுபோல் படப்பிடிப்பு நடத்தப்பட்ட காணொளி காட்சி தற்பொழுது சமூக வலைத்தளங்களில் பரவலாக பரவி வருகின்றது.

ஆனாலும் தமிழரசுக் கட்சியில் முக்கிய அங்கம் வகிப்பதாக கூறி வரும் அந்த நபரினால் அப்படி உலருணவுப்பொருட்கள் யாருக்கும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை என மக்களினால் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் எஸ்.குகதாஸனிடம் கேட்டபோது கட்சிக்கும்அந்த நபருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் தமிழரசு கட்சியின் நிகழ்விற்கு வருகை தந்து முக்கிய பிரமுகர்களுடன் புகைப்படங்களை எடுத்து தங்களுடைய முகநூல் ஊடாக பதிவிட்டு வருவதாகவும் இவருடைய மோசடி அரசியல் செயற்பாட்டிற்கும் தமிழரசுக்கட்சியின் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் கட்சியை பயன்படுத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் இவ்வாறான போலி முகநூல் நபர்களை நம்ப வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதும் தன்னை தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் என முக நூலில் கூறிவரும் அந்த நபரினால் உலருணவு பொருட்கள் யாருக்கும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை என மக்கள் கூறுகின்றனர்.




## அடக்கப்படும் தமிழர்கள் ஒன்றிணையுமாறு கருணாகரம் அழைப்பு

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

தமிழ் மக்கள் மீண்டும் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகின்றனர்.அவர்களது உடைமைகள் கபளீகரம் செய்யப்பட்டு, கலாசாரங்கள் மழுங்கடிக்கப்பட்டுகின்றன.

எனவே தமிழ்த் தேசியத்தை விரும்பும் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை ; அபகரிப்பு செய்கின்றது.

இந்நிலையில் எதிர்காலத்தில் மாகாணசபை முறைமை இருக்குமோ என்ற சந்தேகம் கூட எழுகின்றது என்றார்.

## சாணக்கியனின் கோரிக்கைக்கு பலன் கிடைத்தது திக்கோடை

கவனத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி பதிலின் போது கொண்டு சென்றிருந்தார்.

அத்துடன், குறித்த பிரச்சனைக்கு விரைவில் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையிலேயே திக்கோடை வைத்தியசாலையில் விரைவில் சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளரினால், சுகாதார அமைச்சருக்கு கடிதம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது அமைச்சருக்கு இரா. சாணக்கியன் அவர்கள்தன் கோரிக்கையை நடைமுறைப்படுத்தியதற்கு நன்றி தெரிவித்தார்.

மட்டக்களப்பு - திக்கோடை பகுதி மக்கள் எதிர்நோக்கி வந்த அசௌகரியம், இரா.சாணக்கியனின் முயற்சியினால் முடிவிற்கு வந்துள்ளது.

## டக்ளஸ் வாய் திறக்காதது ஏன்?; சாணக்கியன் எம்.பி.கேள்வி

ஏன் எந்த கருத்தினையும் வெளியிடவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்.

களுவாஞ்சிகுடியில் உள்ள தனது அலுவலகத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

கொறொனாவினால் சிரமத்திற்குள் வாழும் மக்களை அரசாங்கத்தின் தற்போதைய விலை அதிகரிப்பு செயற்பாடும் மேலும் பல கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

பேக்கரி பொருட்களுக்கான விலைகள் ஐந்து ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் எரிபொருளை அடிப்படையாக கொண்ட அனைத்து துறைகளின் உற்பத்திகள்; 15 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் பிரிமா நிறுவனம் கோதுமைமாவின் விலையை மூன்று ரூபா ஐம்பது சதத்தினால் அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களுக்குள் அரிசியின் விலை 2%ரூபா தொடக்கம் 46ரூபா வரை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் தேங்காய் எண்ணெயின் விலை 30ரூபாவினாலும் பருப்பின் விலை 36 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் எரிபொருளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

வடகிழக்கிலே தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் மூன்றில் இரண்டு கரையோர பிரதேசங்களாகும் .மீன்பிடிக்கான அமைச்சரவை அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஒரு தமிழர் . மூன்றில் இரண்டு பங்கு கரையோர பிரதேசத்தை வைத்து மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மக்களின் நலன் கருதி இதுவரை எரிபொருள் விலை அதிகரிப்பை பற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எந்தக் கருத்தினையும் வெளியிடவில்லை. அன்றாடம் மீன்பிடிக்க சென்று சிறிதளவு மீனை பிடித்து விற்பனை செய்து வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பற்றி இவர்கள் ஏன் சிந்திக்கவில்லை.

இன்று விவசாயிகளுக்கு பசளையில்லை. யூரியா பையொன்று 5000ரூபாவாக காணப்படுகின்றது. விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமல்ல கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகளை சேகரித்து அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும் என்பதற்காக விலைவாசிகளை நாங்கள் குறைப்போம், மீனவக் குடும்பங்களுக்கும் விவசாயிகளுக்கும் நல்லதொரு எதிர்காலத்தை அமைப்போம் எனக்கூறி செயற்பட்ட அனைவரும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். அவர்களெல்லாம் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்தின் இந்த மோசமான செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்.

## கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களில் இறந்து கரையொதுங்கும்

நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை காரைதீவு பெரிய நீலாவணை பிரதேச கடல் மற்றும் பாண்டிருப்பு திருக்கோவில் பிரதேச கடலில் கடலாமைகள் மற்றும் மீன்கள் கரை ஒதுங்கியுள்ளன.

அண்மையில் கொழும்புக்கடலில் இடம்பெற்ற எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் தீப்பற்றலினால் ஏற்பட்ட எண்ணெய் கசிவு காரணமாகவே நாட்டின் பல இடங்களில் இவ்வாறு கடல் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருவதாகக்கூறப்படுகிறது. இதுமக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.அவர்கள் கடல்மீன்களை தவிர்த்துவருகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டத்தின்கடற்கரைகளை அண்டிய பகுதிகளிலும் உயிரிழந்த நிலையில் ஆமைகள் டொல்பின் மீன்கள் கரையொதுங்கி வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் உயிரிழந்து கரையொதுங்கும் ஆமைகள், டொல்பின் மீன்களை அம்பாறை வனஜீவராசிகள் மிருக வைத்திய பிரிவிற்கு அனுப்பி உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.மேலும் குறித்த உடற்கூற்று அறிக்கை தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்பிக்கப்படவுள்ளதாக பிராந்திய சுற்றுவட்ட உத்தியோகத்தர் நாகராசா சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

கிரான்குளம்தாழங்குடாபுதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இந்த உயிரினங்கள் கரையொங்கி வருகின்றன. கிரான்குளம் பகுதியில் மூன்று ஆமைகளும் ,ஒரு டொல்பின் மீனும் கரையொதுங்கியுள்ள நிலையில் தாழங்குடா பகுதியில் ஐந்தரை அடி நீளமான டொல்பின் மீனொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் கடல் சுழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள்இமத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டதுடன்,இறந்த நிலையில் பலத்த காயங்களுடன் கரையொதுங்கிய டொல்பின் உள்ளிட்ட கடலாமைகளை மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிராந்திய சுற்றுவட்ட உத்தியோகத்தர் நாகராசா சுரேஸ்குமார் பார்வையிட்டதுடன், பகுப்பாய்விற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி பேர்ள் கப்பல் தீ பரவியதிலிருந்து இதுவரை 40 இற்கும் மேற்பட்ட கடலாமைகளின் உடல்களும் 05 டொல்ஃபின்களின் உடல்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt



# ஏறாவூர் சம்பவம் நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் செல்வதை எடுத்துக்காட்டுகின்றது

## இம்ரான் எம்.பி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஏறாவூர் பொதுமக்கள் வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் நாடு சர்வாதிகாரத்தை நோக்கி போவதை எடுத்துக்காட்டுகின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவற்காக வீதிக்கு வந்த சில பொதுமக்கள் பாகாப்புக்கடமையில் இருந்தவர்களால் வீதியில் இருகைகளையும் உயர்த்தி முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.

இந்த நாடு ஜனநாயக நாடு. சட்டவாட்சி அமுலில் உள்ள நாடு. எனவே, எல்லாவற்றையும் சட்டரீதியாகவே அணுக வேண்டும். அதுவும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அரசியலமைப்பு வாசகத்துக்கமைய எல்லோருக்கும் சட்டம் அமுல் படுத்த வேண்டும். சட்டம் பாரபட்சமாக அமுல் படுத்தப் படக்கூடாது என்பதையே இந்த வாசகம் எடுத்துக்காட்டுகின்றது.

ஏறாவூர் சம்பவம் சட்டத்துக்கு புறம்பானது. மனிதாபிமானமற்றது. ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம் உள்ளது. வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இச்சம்பவம் அவர்களது சுயகௌரவத்தை கொச்சைப்படுத்துகின்றது.

பயணத்தடை அமுலில் இருப்பதாக சொல்லப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் நடமாடுகின்றன. அதேபோல பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம்.

இந்நிலையில் ஏறாவூரில் தமது அன்றாடத் தேவையை நிறைவேற்ற வந்த பொதுமக்களை மட்டும் வதைக்கின்ற செயல் நாட்டில் நியாயமான சட்டவாட்சி இல்லை என்பதை உறுதிப் படுத்துகின்றது. சட்டம் பொதுவாக எல்லோருக்கும் தான் அமுல் படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப்படுவதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பு மிகத் தெளிவாக செயற்படுகின்ற நிலையில் சட்டத்தை தமது கையில் எடுத்து தண்டனை வழங்கும் அதிகாரத்தை இந்த அரசு காவல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியுள்ளமையையே இது எடுத்துக் காட்டுகின்றது. அரசின் பக்கச்சார்பான இந்தச் சர்வாதிகாரப் போக்கு குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அப்பாவி மக்கள் இவ்வாறு வீதியில் தண்டிக்கப்பட்ட போதும் கூட 20 முதல் அரசுக்கு புதிதாக ஆதரவு தெரிவித்து வருகின்றவர்கள் இது குறித்து மௌனம் சாதிப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன்.

அவர்களுக்கு இந்த மக்கள மீது உண்மையான அன்பு இருக்குமாயின் சட்டத்துக்கு பறம்பாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அவர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உருக்குலைந்த நிலையில் யானையின் சடலம் மீட்பு

(க.ருத்திரன்)



மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் கருவப்பன்சேனையில் உருக்குலைந்த நிலையில் உள்ள யானை ஒன்றின் சடலம் காணப்படுவதாக பிரேத வாசிகள் தகவல் தெரிவிக்கின்றனர்.

கருவப்பன் சேனையில் அமைந்துள்ள குளத்திற்கு அருகாமையிலேயே இவ் யானையின் சடலம் காணப்படுகிறது.

அது இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என கிரான் வனஜீவராசிகள் திணைக்களம் தகவல் தெரிவிக்கின்றது.

கடந்த 09 ஆம் திகதியன்று இவ் யானை இறந்துள்ளாகவும் அதன் உடல் பாகங்களின் மாதிரிகளை உடற் கூற்றாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

குறித்த பிரதேசத்தினை சுற்றவரவுள்ள கிராமங்களான மதுரங்குளம்,கட்டுமுறிவு,குஞ்சன் குளம் போன்ற கிராமங்களில் நோய்வாய்ப்பட்டு, உடல் மெலிந்த நிலையில் கடந்த சில வாரங்களாக அலைந்து திரிந்ததாக அதனைக் கண்ட கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குளத்திற்கு அருகாமையில் யானையின் பழுதடைந்த இறந்த உடல் காணப்படுவதனால் நீரில் அதன் எச்சங்கள் கலக்கக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவ் குளத்து நீரினையே தாங்கள் குடிநீர் மற்றும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதாக தெரிவிக்கின்றனர். அவ்விடத்தில் இருந்து அதனை அகற்ற நடவடிக்கை எடுத்து தருமாறும் சம்பந்தப்பட்டோரை கேட்கின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் வேளான்மை செய்கை, மீன் பிடி, காட்டுத் தொழில் போன்ற வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளில் கிராமவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகும் நிலையும் இடம்பெறுவதாக கூறுகின்றனர்.

யானைக்கும் மனிதனுக்கும் இடையில் அடிக்கடி இடம்பெறும் மோதல் காரணமாக இரு தரப்பிலும் உயிரிழப்புக்கள் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இடம்பெற்று வருகின்றது.

வாகரை பிரதேசத்தில் இது வரை 2 யானைகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தில் இம் மாத முடிவிற்குள் 3 யானைகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

# திருகோணமலையில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூவரில் 6 மாத குழந்தை மரணம்

(அப்துல்சலாம் யாசீம்)
(பொன்ஆனந்தம்)

திருகோணமலை கப்பல் துறை பகுதியில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூவரில் 6 மாத குழந்தை உயிரிழந்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் குடும்ப தகராறு காரணமாக மாமா, மாமி மற்றும் வாளால் வெட்டியவரின் 6 மாத குழந்தை ஆகியோர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் வெட்டிய சந்தேக நபரின் மாமா, மாமி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு இருந்த நிலையில் மாமியாரின் கை துண்டிக்கப்பட்ட நிலையில் சீனக்குடா பொலிசார் துண்டிக்கப்பட்ட கையை திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இருந்த போதிலும் குறித்த 43 வயதுடைய முத்துமாரி என்ற பெண்ணுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் துண்டிக்கப்பட்ட கையை பொருத்த முடியாமல் போயுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இருந்தபோதிலும் 47 வயதுடைய பெர்ணாந்து குமார் என்பவருக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை குறித்த சம்பவத்தில் 6 மாத குழந்தை வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த ஆறு மாத குழந்தையின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை தேடி வருவதாகவும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்.

## பாண்டிருப்பில் இயங்கிவரும்

# GK சினிமா திரையரங்கு நிறுவனத்தினரால் 20 இலட்சம் செலவில் நிவாரணம்

(எஸ்.சபேசன்)





கல்முனை பாண்டிருப்பில் இயங்கிவரும் GK சினிமா திரையரங்கு நிறுவனத்தினரால் நாட்டில் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள வேளையில் கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அம்பாரை மாவட்டத்தில் வழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு அம்பாரைமாவட்ட மேலதிக அரச அதிபர் வே.ஜெகதீசன் தலைமையில் நேற்று காலை திரையரங்கில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது





இந்த மனிதநேய நிவாரணப்பணிக்கு 20 இலட்சம் பெறுமதியான உலர்உணவுப்பொதிகள் 1200 பேருக்கு எஓ சினிமா திரையரங்கு நிறுவனத்தினரால் வழங்கிவைக்கப்பட்டன

இந்தப் பிரதேசத்தில் மனித நேய நிவாரணப்பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் எஓ சினிமா திரையரங்கு நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த ந. இராஜேஸ்வரன் (ராஜு) அவர்களால் மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க இந்த நிவாரணப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிவாரணப் ,பணியானது, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ,கல்முனை, நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, துரைவந்தியமேடு, மணற்சேனை, சொறிக்கல்முனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு மற்றும் பெரியகல்லாறு போன்ற கிராமங்களில் வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது .







கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels


நல்லூர்
சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பரத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74


கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it begins with the
pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74


2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels

# இந்தியா அதிகாரப்பரவலுக்கு வாயால் அக்கறை காட்டுவதை விடுத்து செயலில் காட்ட வேண்டும்

(துறையூர் சஞ்சயன்)

முழு அதிகாரப்பரவலுக்கு இந்தியா இலங்கையை வலியுறுத்தினாலும் இலங்கை, இந்தியாவின் வலியுறுத்தலை செவி சாய்ப்பதாக தெரியவில்லை எனவே வாயால் அக்கறை காட்டுவதை விடுத்து இந்தியா செயலில் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடகச் செயலாளருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர்கள் உரிமைக்கான போராட்டம் தந்தை செல்வா தலைமையில் அகிம்சை ரீதியாகவும் அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆயுத ரீதியாகவும் மௌனித்ததன் பிற்பாடு இரா. சம்பந்தன் ஐயா தலைமையிலான இராஜதந்திர செயல்பாடும் %3, வருட காலங்களாக தொடரான அரசியல் செயல் முறைகளிலும் அயல் நாடான இந்தியாவிற்கு ஏனைய நாடுகளை விட கரிசனையும் பங்களிப்பும் இருந்து கொண்டே உள்ளது.

இந்தியாவில் யார் பிரதமராக தெரிவானாலும் தமிழ்த்தேசியத் தலைமைகளை நேரடியாக சந்தித்து வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் தீர்வு விடயங்களை பல தடவைகள் வலியுறுத்திய வரலாறுகள் இன்று நேற்றல்ல இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்த காலம் தொடக்கம் தற்போதய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பிரதமராக உள்ள காலம் வரையும் தொடராகவே அழுத்தங்களை இலங்கை அரசுக்கு வழங்குமாறு கேட்ட வரலாறுகள் உள்ளன.

அதன் அடிப்படையில் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலப்பகுதியான 198%,இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனாவின் ஆட்சியில் 13, வது அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் அடிப்படையில் மாகாணசபை உருவாக்கப்பட்டது.

அதில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை தேர்தல் முதன் முதலாக 1988, இல் இடம்பெற்றது. அதன்பின் 2006, இல் மக்கள் விடுதலை முன்னணியினால் உச்சநீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இணைந்த வடக்குகிழக்கு மாகாணசபை இரண்டாக வடக்கிற்கு தனியாகவும் கிழக்கிற்கு தனியாகவும் பிரிக்கப்பட்டது என்பதெல்லாம் வரலாறு. இந்திய அரசின் அழுத்தத்தினால் அதிகாரப்பகிர்வுக்காக கொண்டு வரப்பட்ட மாகாணசபை அதிகாரங்கள் படிப்படியாக புடுங்கப்பட்டு தற்போதய அரசின் காலத்தில்



மாகாண நிர்வாகத்தின் கீழ் இருந்த வைத்தியசாலைகள், பாடசாலைகள் என வடக்குக் கிழக்கில் இருந்த நூற்றுக்கணக்கான பாடசாலைகளும் வைத்தியசாலைகளும் மத்திய அரசின் கீழ் மாற்றப்பட்டுள்ளன.

மாகாண அரசின் அதிகாரத்தை திட்டமிட்டு மத்திய அரசுக்கு பறிப்பதன் மூலம் மாகாண அரசின் நிர்வாகத்தை பலவீனப்படுத்தும் சதியாகவே இது அமைந்துள்ளது. இவ்வாறான விடயங்களை மட்டுமன்றி வடக்குக் கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வல்லமை பொருந்திய நாடு இந்தியா மட்டுமே என்பது யாவரும் அறிந்த விடயம். இதனை இந்தியா அரசு செய்ய வேண்டும் என்பதே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தொடராக வலியுறுத்தி வருவதும் அதற்கான பேச்சு வார்த்தைகளை இந்திய அரசின் தலைவர்கள் இந்திய தூதுவர்களுடன் பலமுறை கதைத்தும் ஆக்கபூர்வமாக எந்தப்பலனும் இன்னும் கிடைக்கவில்லை.

இறுதியாக கடந்த வாரமும் இந்திய தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பிலும் மீண்டும் மீண்டும் அதனையே வலுயுறுத்தி எமது தலைவர்கள் பேசியுள்ளனர். இதுவும் வழமை போன்று தலைப்பு செய்திகள் பரபரப்பாக வெளிவந்தன. இந்தியா தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அக்கறையாக இருப்பதாக பழைய வாக்கியமாகவே இதுவும் உள்ளதோ என்ற சந்தேகமே தமிழ்மக்கள் மத்தியில் உள்ளது.

ஒவ்வொரு சந்திப்பிலும் இந்திய இராஜதந்திரிகள் நம்பிக்கை ஊட்டும் விதமான கருத்துக்களை கூறினாலும், அது செய்திகளாக மட்டுமே காணப்பட்டது. செயல் வடிவில் இல்லை என்ற ஏக்கம் வடக்குகிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

இருந்தபோதும் ராஜபக்ஷக்கள் அரசு இந்தியாவின் பல எதிர்ப்புகளை மீறி சீனாவின் ஆதிக்கத்தில் சென்று கொண்டிருக்கும் நிலையை உணர்ந்தாவது, வடக்கு கிழக்கு மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு விடயங்களுக்கு விரைந்து செயல்வடிவில் அக்கறை காட்டவேண்டும் என மேலும் கூறினார்.

## கிழக்கு கடற்கரையில் இறந்து கரை ஒதுங்கும் ஆமைகளும் டொல்பினும்

## மீன்களை விற்கமுடியாமல் வியாபாரிகள் திண்டாட்டம் வாழ்வாதாரம் பாதிக்கப்படடுள்ளதாக கவலை

(ரக்ஸனா)

கிழக்கு கடற்கரையிலும் ஆமைகளும், டொல்பினும் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதால் மீன்களை விற்கமுடியாமல் வியாபாரிகள் திண்டாட்டம், வாழ்வாதாரம் பாதிக்கப்படடுள்ளதாக கவலை.

கிழக்கு கடற்கரையிலும் ஆமைகளும், டொல்பினும் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதால் மீனவர்களும், மக்களும் அச்சத்தில் கடல் மீன்களை விற்கமுடியாமல் வியாபாரிகள் திண்டாட்டாடுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் அப்பகுதியில் தொழிலுக்குச் செல்லாமல் தமது படகுகளையும். தோணிகளையும் கரையேற்றி வைத்துவிட்டு தொழிலின்றி இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

கடலில் தமது கடற்பகுதியில்



சிலரால் மேற்கொள்ளப்படும் சுருக்கு வலை மீன் பிடிக்கு மத்தியில் தாம் அன்றாடம் செய்து வரும் மீன்பிடித் தொழில் தற்பேதைய கொரோனா தாக்கத்தினால் நாடு முடக்கப்பட்டுள்ள இந்நிலையில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் தமது கடற் பிராந்தியத்தில் கடல் ஆமைகளும், டொல்பினும் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருவதானல் தாம் பெரிதும் மேலும் பாதிப்படைந்துள்ளதாக களுதாவளை, கல்லாறு, களுவாஞ்சிகுடி, உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றர்.

பல வருடக்கணக்காக இவ்வாறு தாம் கடலில் தொழில் செய்து வரும் இந்நிலையில் இவ்வாறு கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்கியதில்லை இது தென் மேற்கு



கடற் பிராந்தியத்தில் அண்மையில் தீப்பற்றி எரிந்த என்.ரி.எக்ஸ் பிறஸ் பேர்ள் கப்பலிலிருந்து கடலில் கலந்துள்ள பொருட்களை கடல் வாழ் உயிரினங்கள் உண்டதனால் தான் இவ்வாறு அந்த உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்குகின்றனவோ என எண்ணத் தோணுகின்றது.

இருந்தபோதிலும் துறைசார்ந்த அதிகாரிகளும்; அரசாங்கமும் மக்கள் கடல் உணவுகளை உண்ணலாமா? உண்ண முடியாதா என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும். ஏனெனில் கடலில் பிடிபடும் சொற்ப மீன்களைக் கூட நாம் விற்பனை செய்ய முடியாதுள்ளதுள்ளோம், மக்கள் கொள்வனவு செய்வதங்கு அச்சமடைகின்றார்கள் என அப்பகுதி மீனவர்களும், மீன் வியாபாரிகளும், அங்கலாய்கின்றனர்.

## லிந்துலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலி

(க.கிஷாந்தன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டன்நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை நகரத்தை அண்மித்த பகுதியில் நேற்று மதியம் 2 மணியனவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நானுஓயா சமர்செட் பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய விஜயசுந்தரம் என்பவரே மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை பகுதியிலிருந்து நானு ஓயா நோக்கி பயணிக்கையிலேயே அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார். வேகக்கட்டுப்பாட்டை இழந்து அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் காட் கல்லில் மோதியுள்ளது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து அவர் வீசப்பட்டுள்ளார். வீதிக்கு அருகாமையில் இருந்த 'காட் கல்' எனப்படுகின்ற எல்லை நிர்ணய கல்லில் தலைபட்டதாலேயே உயிரிழந்தார். அவர் மோட்டார் சைக்கிளில் இருந்து வீசுபடும் போது தலைக்கவசமும் கழன்றுள்ளது.

படுகாயமடைந்த அவர் லிந்துலை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் உயிரிழந்தார் என்றும், சடலம் பிரேத பரிசோதனைக்காக லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் பிறந்தநாள் பரிசு மன்னார் மாணவிக்கு



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அதே தினத்தில் பிறந்தநாள் கொண்டாடும் மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வீதியில் வசிக்கும் ஒரு மாணவிக்கு ஜனாதிபதியால் அனுப்பிவைக்கப்பட்ட பரிசினை மன்னார் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி சீ.பி.ஜெயதிலக ஞாயிற்றுக்கிழமை மாணவியின் இல்லத்தில் வைத்து வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

## நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க அரசாங்கத்திடம் பெரும்பான்மை பலம் இருக்கின்றது:இ.தொ.கா தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

அமைச்சர் கம்பன்பிலவுக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க அரசாங்கத்திடம் பெரும்பான்மை பலம் இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜா சக்தியின் பணிப்பாளரும், கொவிட் தடுப்பூசி செயலணியின் பிரதானியுமான பாரத் அருள்சாமி இதனை கூறியுள்ளார்.

கொவிட் 19 தடுப்புக்கான 2ம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி கண்டி மாவட்டத்தில் மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இதன்படி கண்டி மாநகர சபை, பஸ்பாகே கோரளை மற்றும் பஹத்ததும்பர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அதனடிப்படையில் பெருந்தோட்ட பகுதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்பட்டது. அந்தவகையில், விக்டன் தோட்டம், டெம்பள்ஸ்டோவ் தோட்டம், ஐட்றி தோட்டம், வெஸ்டோல் தோட்டம், பார்கேபல் தோட்டம், பாரன்டா தோட்டம், கடியன்சேனை பகுதி, போகீல் தோட்டம், நாவலப்பிட்டியில் உள்ள பல பகுதிகளிலிருந்து வந்திருந்த 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 1%00 பேர் வெஸ்டோல் தமிழ் வித்தியாலயத்தில் ஸ்புட்னிக் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர்.

இந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அங்கு சென்றிருந்த போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி மேற்படி விடயத்தை கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்...

'இ.தொ.காவின் கோரிக்கைக்கு அமைய மலையக பெருந்தோட்ட



பகுதிகளிலும் கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு அங்கமாகவே நாவலப்பிட்டி வெஸ்டோல் தோட்டத்தில் தடுப்பூசி செலுத்தும், பணிகள் இடம்பெறுகின்றன. ஆகவே 60 வயதுக்கும் மேற்பட்டவர்களை தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றது அமைச்சர் கம்பன்பிலவுக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க அரசாங்கத்திடம் பெரும்பான்மை பலம் உள்ளது.

ஆகவே எதிர்க் கட்சி எடுக்கும் எந்த நடவடிக்கையும் அரசாங்கத்தை பாதிக்காது. இது வெறுமனே அரசியலை நோக்கமாக கொண்டது.

அரசாங்கம் மக்களுக்கானது என்பதால் அரசாங்கத்திற்குள் எவ்வித கருத்து முரண்பாடுகளும் இல்லை. தற்போதைய நிலையில் உலக நாடுகள் சில பொருளாதார ரீதியாகவும், சுகாதார ரீதியாகவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஆனால் எமது அரசாங்கம் வெற்றிகரமாக செயற்படுகின்றது. ஆகவே ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட கருத்துக்களுக்கு அரசாங்கம் பொறுப்பல்ல.

அண்மையில் ஏற்பட்ட கப்பல் தீ பரவல் திட்டமிட்ட செய்யப்பட்டதல்ல. அரசாங்கம் என்ற வகையில் நாட்டின் கடல் வளத்தை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது. கப்பல் விபத்து தொடர்பில் கப்பல் கெப்டன் உள்ளிட்ட கப்பல் நிறுவனத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும், அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை'என்றார்.

## முன்னாள் போலிஸ் உத்தியோகத்தர் கோரோனாவுக்கு பலி

அலுவலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் கொரோனா தொற்றால் நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார். முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான இவர், கொரோனா தொற்று காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நான்கு பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய குறித்த நபர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்றுள்ளார்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இதுவரை மூன்று கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண வீட்டில் ஒன்றுகூடுவதை நிறுத்துங்கள் கூட்டம் கூடுவதையும் நிறுத்துங்கள்

### மீறுவோர் மீது கடும் நடவடிக்கை; மட்டு.அரச அதிபர் அறிவிப்பு

ஊடாக வழங்கப்படும்.அதனை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.மரண வீடு நடைபெற்றால் பொதுமக்கள் அங்கு ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பில் அதிகரித்து வருவதன் காரணமாக பிரதேச செயலக பிரிவுகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு தீர்மானங்களை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே நாளில் 232 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.இது மாவட்டத்தில் ஒரு நாளில் இனங்காணப்பட்டுள்ள அதிகூடிய தொற்றாளர் எண்ணிக்கையாகும். தொற்றாளர்கள் அதிகரித்து செல்லும் நிலையில் 21 ஆம் திகதி பயணத்தடை நீக்கப்படும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வகையான நடைமுறைகளை பின்பற்றுவது என்பது குறித்து ஆராயப்பட்டது.இதற்கிணங்க சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேச செயலக மட்டத்தில் இரண்டு தினங்களுக்கு ஒரு தடவை பிரதேச செயலாளர்கள்,சுகாதார வைத்திய அதிகாரி,பாதுகாப்பு தரப்பினர்,ஏனைய தரப்பினர்கள் 15 பேர் அடங்கிய குழுவொன்று கூடி அந்தந்த பகுதிகளில் உள்ள நிலைமைகளை ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்து எங்களுக்கு அறியத்தருவதன் மூலம் அவற்றினை நாங்கள் தேசிய கொவிட் செயலணிக்கு அனுப்பி அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரணம் ஒன்று ஏற்பட்டால் அதன் பின்னர் எட்டு தினங்கள் வீடுகளில் ஒன்றுகூடுவது வழக்கமாக இருந்துவருகின்றது.இதன்காரணமாக பரவல் தீவிரமடைவதாக சுகாதாரப்பிரிவினரால் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வீட்டில் மரணம் ஏற்பட்டால் மரண வீட்டில் பத்து தினங்கள் ஒன்று கூடுவது, தேவையற்ற கூட்டங்களை கூட்டவேண்டாம் என்ற அறிவித்தல் பொதுச்சுகாதார பரிசோதகர் ஊடாக வழங்கப்படும்.அதனை மீறிச்செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.மரண வீடு நடைபெற்றால் பொதுமக்கள் அங்கு ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பெரியகல்லாறு 02ஆம், 03ஆம் கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அப்பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படுகின்றது.

இன்று நாடு திறக்கப்பட்டாலும் கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருவதன் காரணமாக பொது இடங்களிலும் சந்தை போன்ற இடங்களிலும் ஏனைய பகுதிகளிலும் நாளாந்தம் பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். இது தொடர்பில் பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

சுகாதார நடைமுறைகளை மீறுதல்,ஒன்றுகூடுதல்போன்றவை மேற்கொள்வோர் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4519குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளனர்.ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.





# பெரியகல்லாறு – 2 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டன

## மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய கல்லாறு 2 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாவட்டத்தில் 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 4519 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் உள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட கொரோனா தடுப்பு செயணி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று 21ம் திகதி பயணக் கட்டுப்பாடு நீக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை 232 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதும் தற்போது தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையிலே பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார முறைகளை எவ்வாறு முன்னெடுப்பது என ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பிரதேச செயலக அடிப்படையில் பிரதேச செயலாளர் சுகாதார அதிகாரிகள், பொலிசார், இராணுவத்தினர் உட்பட 10 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இரண்டு நாட்களுக்குள் கூட்டத்தை கூடி அந்தபகுதியில் இடம்பெறும் விளைவுகளின் தரவுகளை சேகரித்து தீர்மானங்களை எடுத்து அறிவிப்பதன் மூலம் நாங்கள் அதனை நாட்டின் உரிய தரப்பினருக்கு அனுப்பி நடைமுறைப்படுத்தமுடியும்.

ஒரு வீட்டில் மரணம் நடந்தால் மரணத்தை தொடர்ந்து அந்த வீட்டிலே உறவினர்கள் ஒன்றாக கூடுவது வழக்கம் இதனால் சமூக நெருக்கங்கள் ஏற்படுகின்றது இதனால் தொற்று அதிகரிக்கின்றது எனவே இன்றில் இருந்து மரணம் இடம்பெற்றால் அந்த வீட்டிற்கு பொது சுகாதார அதிகாரிகளால் அறிவித்தல் விடப்படும் அதனடிப்படையில் தேவையின்றி கூடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அதனை மீறி கூடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மாவத்தில் 24 ஆயித்துக்கு மேற்பட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கு அடுத்த கட்டான தடுப்பூசி எதிர்வரும் தினங்களில் வந்தடைந்ததுள்ளதாகவும் அதனை ஏற்ற நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது. இருந்தபோதும் பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட் பின்னர் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் ஒன்றாக கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயத்தில் பொலிசார் கண்டிப்பாக செயற்படுவார்கள். எனவே பொதுமக்கள் இந்த கொரோனா தொற்றை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கி செயற்படவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மூங்கிலாறு - நவகிரி ஆற்றின் இரு மருங்கிலும் காப்புக்கட்டு அமைக்குக

## விவசாயிகள் கோரிக்கை

துறையூர் சஞ்சயன்

நவகிரி -அம்பாறை நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுகளுக்குட்பட்ட மூங்கிலாறு மற்றும் நவகிரி ஆற்றுக்கு இரு மருங்கிலும் காப்புக் கட்டு ( Bund) இன்மையினால் விவசாய வயல் நிலங்கள் சேதமுறுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டு. மாவட்ட மண்டூர் வெல்லாவெளி கமநல சேவைகள் நிலையத்தின் கீழுள்ள செய்கையாளர்கள் அம்பாறை மற்றும் நவகிரி ஆற்று நீர்ப்பாசனத்தினையே பயன்படுத்தி வருகின்றனர்.


மூங்கிலாறு - நவகிரி ஆற்றில் நீர் மட்டம் அதிகரிக்கும்போது மூங்கிலாறு மற்றும் நவகிரி ஆற்றை அடுத்துள்ள நெற்பயிர் வயல் நிலங்களில் ஆற்றுநீர் உட்புகுவதனால், செய்கை பண்ணப்பட்ட 1000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் சேதமுற்று அழிவடைவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆற்றுநீர் பெருக்கெடுத்து வரம்புகளை உடைப்பதனால்நெற்பயிர்கள் ஆற்று மணலால் மூடப்பட்டு தொடர்ச்சியாக வயல்நிலங்கள் அழிவடைந்து பாதிப்புறுவதாக தெரியவருகிறது.

எனவே, விவசாயிகளின் தேவை கருதி இரு ஆறுகளிலும் இரு பக்க

மருங்கிலும் காப்புக்கட்டை அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பொதுமக்கள் வெளியில் செல்வதை தவிர்க்குமாறு கிண்ணியா பிரதேச செயலாளர் கோரிக்கை



(இஃஜாஸ் -ஏ- பரீட்)

நாடு பூராகவும் பயணக் கட்டுப் பாடு 21ஆம் திகதி நீக்கப் படவுள்ளதால் கிண்ணியாவில் வாழும் பொது மக்கள் வெளியில் செல்வதை தவிர்ந்து கொள்மாறும், அத்தியாவசிய தேவைகளுக்கு குடும்பத்திலிருந்து ஒருவர் மாத்திரம் சென்று தமது தேவைகளை நிறைவேற்றுமாறும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 12 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப் படுத்தப் பட்டன. றகுமானியா நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தனிமைப் படுத்தப் பட்ட குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் 2ஆம் கட்டமாக கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் கிராம உத்தியோகத்தர் ஏ.சி.எம்அப்துல் பரீட் தலைமையில் வழங்கி வைக்கப் பட்டன.

இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலக பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.எம்.பாசித், றகுமானியா கிராம உத்தியோகத்தர் ஏ.சி.எம்.அப்துல் பரீட், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர் கே.எம்.உவைஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.சமீமா மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு கிண்ணியா பிரதேச செயலாளர் மேலும் குறிப்பிட்டதாவது கடந்த ஆம் 14 திகதி இப்பகுதி முடக்கப் பட்டது.2வது தடவையாக 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப் படுகின்றன.

ஏற்கனவே 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொதிகள் வழங்கப் பட்ட முதல் தடவையாக வழங்கப் பட்டவர்களுக்கு மீள வழங்கப் படுகின்றது. மாறாக புதியவர்களுக்கு இப் பொதி வழங்கப் படமாட்டது.

வெளியிடங்களுக்கு சென்று புதிதாக வந்தவர்களுக்கு நோய் தொற்று உள்ளதா? இல்லையா? என்பதை கிராம உத்தியோகத்தர் ஆராய்ந்து பி.சிஆர், அண்டிஜனை மேற்கொள்மாறு கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனாவினால் கிண்ணியாவில் 55 உயிர்களை இழந்துள்ளோம். இனியும் இவ் இழப்புகளிலிருந்து விடு பட நாம் அனைவரும் வீடுகளில் பாது காப்பாக இருக்க வேண்டும் என்றார்.



# பெரண்டினா நிறுவனத்தினால் 9 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் உதவித் திட்டங்கள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 பரவலைத் தடுக்கும் விதமாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டத்திற்கு உறுதுணை செய்யும் நோக்கில் பெரண்டினா நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக 9 மாவட்டங்களில் கொவிட்-19 அவசரகால இடர்முகாமைத்துவ உதவித் திட்டத்தின் கீழ் பல செயற்பாடுகள் மாவட்ட செயலகம் மற்றும் அரச திணைக்களங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோலுக்கிணங்க மட்டக்களப்பு கரடியனாறு கொவிட்-19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கு தேவையான ரூபா. 960,000.00 பெறுமதியான மருத்துவம்சார் உபகரணங்களும் மற்றும் மருத்துவம்சாரா பொருட்களும் பெரண்டினா நிறுவனத்தினால் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் அவர்களின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

மேலும் குறித்த இடர்முகாமைத்துவ உதவித்திட்டத்தின் கீழ் கடந்த 14.06.2021 அன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 முதியோர் இல்லங்கங்கள் மற்றும் 7 சிறுவர் இல்லங்கங்கள் உள்ளடங்களாக 12 இல்லங்களுக்குத் தேவையான ரூபா. 250,000.00 பெறுமதியான உலருணவு மற்றும் தற்சுகாதார பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் பிரதேசத்திலும் 6 கடல் ஆமைகள் கரையொதிங்கின



அம்பாரை, திருக்கோவில் பிரதேச சாகாமம் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் பிரதேசத்தில் உயிரிழந்த ஆறு கடலாமைகள் மற்றும் டொல்பின் ஒன்றின் உடல் பாகமும் கரையொதிங்கி இருப்பதாக திருக்கோவில் பிரதேச சாகாமம் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவி சுற்றுவட்ட அதிகாரி ஞானரெத்தினம் பிரசாந் தெரிவித்து இருந்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விநாயகபுரம் மற்றும் தம்பிலுவில் கடற்கரைகளில் இவ் கடலாமை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன் ஒரு ஆமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக மேற்படி அதிகாரி தெரிவித்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடங்களுக்கு வருகை தந்த திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பி.மோகனகாந்தன் கடலோர சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் அதிகாரி எஸ்.சிவகுமார் திருக்கோவில் பிரதேச கடற் தொழில் பரிசோதகர் வை.யோகதாசன் சாகாம வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஞானரெத்தினம் பிரசாந் ஆகியோர் உயிரிழந்த கடலாமைகளை பார்வையிட்டு இருந்தனர்.

இலங்கை கடல் பிரதேசத்தில் கடந்த 21ஆம் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீ பற்றி எரிந்ததைத் தொடர்ந்து இலங்கையில் பல்வேறு கடற் பிரதேசங்களில் இவ்வாறு கடலாமைகள் கரையொதிங்கி வருகின்ற நிலையில் இன்று திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் தம்பிலுவில் பகுதியில் உள்ள கடற்கரையில் உயிரிழந்த கடல் ஆமைகள் கரையொதிங்கி இருப்பததை அவதானிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# கிண்ணியாவின் எல்லைப்புற பகுதிகளில் 8 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லைப் புர சிறு கிராமங்களில் உள்ள காட்டுப்பகுதிகளான நன்னி, கண்டல் சாடு, மணல் ஆறு, சோள வெட்டுவான், தளவாய், படுகாடு, சாவாறு, கங்கை ஆற்றுப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை யிடப்பட்டது.

குறித்த கசிப்பு உற்பத்தி நிலையங்களில் 2000 ரூபா நாள் கூலிக்கு பணியாளர்களை வேலைக்கமர்த்தி கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அக் கசிப்பு உற்பத்தி நிலையங்களில் கசிப்பு மற்றும் கோடாத் திரவமும் அடங்கிய 26 பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர். இவைகளில் சுமார் 3000 லீட்டர் கசிப்புக்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கிண்ணியா பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவினர் கொடுத்த தகவலுக்கு அமைய குறித்த 8 கசிப்பு உற்பத்தி நிலையங்களும் சுற்றி வலைக்கப்பட்டுள்ளது. கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக புதிதாக கடமையேற்ற சமிந்த குமார பினாந்து அவர்களின் ஆலோசனைக்கு அமைய கிண்ணியா பொலிஸ் நிலை உதவிப் பொறுப்பதிகாரி நிஹார் அவர்களின் தலைமையிலான பொலிஸ் குழு கசிப்பு உற்பத்தி நிலையத்தினை சுற்றி வலைத்துள்ளனர். கசிப்பு உற்பத்தி நிலையங்கள் வைத்திருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கொரோன அச்சம் காரணமாக மதுபானசாலைகள் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதனால் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை கிராமப்புறங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார விதிமுறைகளை மீறி வியாபாரம் செய்த கடைக்கு பதினான்கு நாட்களுக்கு சீல்

(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதார விதிமுறைகளை மீறி வியாபாரம் இடம்பெற்றால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வியாபார நிலையத்திற்கு பதினான்கு நாட்களுக்கு சீல் வைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அமுலில் காணப்பட்ட பயணத்தடை நாளை திங்கட்கிழமை நீக்கப்படவுள்ள நிலையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மக்கள் பாதுகாப்பு கருதி விசேட கூட்டம் செயலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்கான், செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைத், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன, இராணுவ உயர் அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், வர்த்தக சங்கத்தினர், பள்ளிவாயல் நிருவாகத்தினர், பிரதேச மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்கள் பயணத்தடை தளப்பட்ட நிலையில் மாலை 6 மணி வரை திறந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், சுகாதார விதிமுறைகளை மீறி வியாபார நடவடிக்கை இடம்பெற்றால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கௌ;ளப்பட்டு வியாபார நிலையத்திற்கு பதினான்கு நாட்களுக்கு சீல் வைக்கப்படும்.

சிகையங்கார நிலையம் உணவகங்கள் தவிர்ந்த வியாபார நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், உணவகங்களுக்கு உணவுகளை வினியோகம் செய்ய மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுகாதார வைத்திய அலுவலகத்தினால் நடமாடும் பி.சி.ஆர். பரிசோதனை குழாம் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு சுகாதார விதிமுறைகளை மீறுவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

திருமணம், பொது நிகழ்வுகள், ஒன்றுகூடல், விளையாட்டு நிகழ்வுகள் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மரணம் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் சுகாதார தரப்பினரின் பரிசோதனைகள் இடம்பெற்று அதன் முடிவுகள் பெற்ற பின்னர் மரண வீட்டிற்கு சுகாதார விதிமுறைகளை பேணி மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




# மாளிகைக்காடு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

## : ஹரீஸ் எம்.பி களவிஜயம் செய்து அடுத்த கட்டம் தொடர்பில் ஆராய்வு



கடலரிப்பில் ஜனாஸாக்கள் வெளிவந்த காரைதீவு பிரதேச மாளிகைக்காடு மையவாடி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்கில் தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைத்திட்டம் பிரதமரின் பணிப்புக்கு அமைய அமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அரசுக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பணிப்புரைக்கு இணங்க கரையோரம் பேணல் திணைக்களம் முன்னெடுத்த இவ்வேலைத்திட்டத்தின் சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண பணி முடித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டம் தொடர்பில் பார்வையிட இப்பணியை முன்னின்று முன்னெடுத்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்ந்தார். இவ்விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எச். எம்.எம். ஹரீஸின் பிரத்யோக செயலாளர் நௌபர் ஏ பாவா,மாளிகைக்காடு அந்நூர் ஜூம்ஆ பள்ளிவாசல் தலைவர், செயலாளர், முக்கிய நிர்வாகிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஊடகங்களுக்கு இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தனது கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்களுக்கும், கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகளுக்கும், இவ்வேலைத்திட்டத்தை முன்னின்று செய்த சிவில் அமைப்புக்களும் நன்றிகளை தெரிவித்தார்.

மேலும் இவ்வேலைத் திட்டத்தின் அவசரம் உணர்ந்து எங்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்களுக்கும் மாளிகைக்காடு மக்கள் சார்பில் அந் நூர் ஜு/ம்மாப்பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் நன்றிகளை தெரிவித்தார்.

# நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டம்!

(எம்.ஏ.றமீஸ்)



அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு, உள்நாட்டு உற்பத்தியினை அதிகரித்து விவசாயச் செய்கையாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மறுமலர்ச்சி மிக்க மக்கள் நல வேலைத் திட்டங்கள் தற்போது நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் ஒலுவில் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டு வரும் மரக்கறிச் செய்கை மற்றும் உப உணவுச் செய்கை ஆகியன வெற்றியளித்துள்ளன.

விவசாயிகளுக்காக அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் உதவிகளும் மக்கள் நல வேலைத் திட்டங்களும் இவ்வாறான உள்ளூர் உற்பத்தி செய்கைகள் வெற்றியளிக்க காரமாய் உள்ளதுடன் ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தினை தாம் ஆதரிப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் இவ்வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டில் உள்ள விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. செயற்கை உரம் மற்றும் கிருமி நாசினிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தற்காலத்தில் மக்கள் பல்வேறான நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தி நஞ்சற்ற உணவு உற்பத்தியினை ஊக்கப்படுத்துவன் மூலம் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினை உருவாக்கிக் கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ் வேலைத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில் பிரதேசத்தில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கத்தரி, மிளகாய், மரவள்ளி போன்ற மரக்கறிப் பயிர்ச் செய்கைகளும், சோளம், நிலக்கடலை போன்ற உப உணவுப் பயிர்ச் செய்கைகளும் வெற்றிளளித்துள்ளன.

ஆடு மாடு போன்ற பிராணிகளின் கழிவுகள், தாவரங்களின் இலை, குழை தண்டுப் பாகங்கள் போன்றவற்றை பயன்படுத்தி இப்பிரதேசத்தில் இவ்வாறான பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதில் விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரசாங்கத்தின் சௌபாக்கியா வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் பயிர் வகைள், விதை இனங்கள், நாற்றுக்கள் போன்றவற்றை பெற்று மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் இதர சேவைகள் போன்றவற்றின் மூலமும் இவ்வாறான பயிர்ச் செய்கைள் மூலம் மக்கள் தமக்கான பாரிய உணவு உற்பத்தியினை மேற்கொண்டு வருவததோடு பல்வேறான நன்மைகளையும் தாம் பெற்று வருவதாகவும் இப்பிரதேச பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# முஷரப் எம்.பி.யினால் ஊடகவியலாளர்களுக்கு உலருணவு



(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸாரப் முதுநபின் அவர்களின் தலைமையிலான அனர்த்த நிவாரண நிதியத்தினால் உலருணவுகள் நேற்றிரவு கல்முனை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

கொரோனா தொற்று சூழ்நிலை காரணமாக பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதால் வாழ்வாதாரத்தை இழந்த பொதுமக்கள் மற்றும் வசதி குறைந்த மக்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அனர்த்த நிவாரண நிதியத்தின் மூலம் பல பிரதேச மக்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வரும் நிலையிலையிலையே சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். எம். ஜெஸ்மின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப் முதுநபின் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பிரதேச ஊடகவியலாளர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு தனவந்தர்கள், நல்லுள்ளம் படைத்தவர்கள் வழங்கும் உதவியினூடக இந்த நிதியம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# முபாரக் டெக்ஸ் குழுமத்தினரின் அனுசரணையில் நிவாரணப்பணி



(நூருள் ஹுதா உமர்)

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வரும் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு சாய்ந்தமருது முபாரக் டெக்ஸ் குழுமத்தினரின் அனுசரணையில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள உலருணவுகள் (19) பொத்துவிலில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது முபாரக் டெக்ஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எம்.எஸ்.எம். முபாரக் தலைமையிலான குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையிலான அனர்த்த நிவாரண நிதியத்திடம் பொத்துவில் மக்களுக்கான உலருணவுகளை வழங்கி வைத்ததுடன் இனிவரும் காலங்களில் ஏனைய பிரதேசங்களுக்கும் உலருணவுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக சாய்ந்தமருது முபாரக் டெக்ஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எம்.எஸ்.எம். முபாரக் இந்நிகழ்வில் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபின் தாமாக முன்வந்து எங்களின் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு பல லட்சம் பெறுமதியான உலருணவுகளை வழங்கி வைத்த சாய்ந்தமருது முபாரக் டெக்ஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எம்.எஸ்.எம். முபாரக் அவர்களுக்கும் இதற்காக பின்னணியில் உடல் ரீதியாக உழைத்த எல்லோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் இவர்களின் வாழ்வில் எதிர்காலத்தில் பல சிறப்புகளை அடைய பிராத்திப்பதாகவும் தெரிவித்தார்.

# கல்முனை கிளு கிளுப்பு அமைப்பின் ஏற்பாட்டில் நிவாரணப்பணி

(சர்ஜுன் லாபீர், எம்.என்.எம் அப்ராஸ்)



நாட்டில் வேகமாகப் பரவிவரும் கொரோனா அலையைக் கட்டுப்படுத்த அரசினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயணத்தடை காரணமாக அன்றாட வாழ்வாதாரத்தை இழந்த ,வசதி குறைந்த சுமார் 160 குடும்பங்களுக்கு 4000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதியும்,1000 ரூபா பணமும் வழங்கும் நிகழ்வு கிளுகிளுப்பு சமூக சேவை அமைப்பினால்

தலைவர் ஏ.எல்.எம் ஆஸீர் தலைமையில் கல்முனையில் (20) நடைபெற்றது.

இவ் மனிதாபிமான நிவாரணம் வழங்கும் நிகழ்வில்,பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், பிரதேச ஒருங்கினைப்பு உத்தியோகத்தர் கே.எல் யாஸீன் பாவா ஆகியோர் கலந்து கொண்டு பயனாளர் களுக்கு உலர் உணவு பொருட்களை வழங்கி வைத்தனர்.

குறித்த நிவாரணப் பணிக்கு வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் தனவந்தர்கள்,வர்த்தகர்கள் அமைப்பின் உறுப்பினர்கள், மற்றும் நலன் விரும்பிகளின் நிதி உதவி மூலம் இவ் நிவாரணம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிட்டத்தக்க்து

இதேவேளை குறித்த நிவாரண பணியானது அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பல பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் சுகாதார நடைமுறைகளைப் பேணி ஆரம்ப நிவாரண பணி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# விவசாயத் துறையில் புதிய புரட்சி சம்மாந்துறை விவசாயியால் நெல் விதையிடு கருவி மற்றும் களையகற்றும் இயந்திரம் ஆகியவை கண்டுபிடிப்பு





**(ஐ.எல்.எம் நாஸிம்)**

மனித சமூகத்தின் இருப்பிற்கு உணவு இன்றியமையாததாகும் அதற்கு விவசாய உற்பத்திகளே பெரும் பங்கினை வழங்கி வருகின்றன.

வரலாற்றில் வேளாண்மையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு காலநிலைகள், பண்பாடுகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து மாறுபட்டும் இருந்துள்ளது.

இருந்தும் தற்காலத்தில் களைநெல்லை கட்டுப்படுத்துவது விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் பாரிய சவாலாக காணப்படுகின்றது.

ஏனைய களைகளுக்கு இரசாயனம் உண்டு ஆனால் நெற்செய்கையில் 100மூ விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும் களைநெல்லுக்கு இரசாயனம் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச நெற்சைய்கை விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் நாடு பூராகவும் களைநெல் பாரிய சவாலாக காணப்படுகின்றது.

இதனை தடுக்கும் முகமாகவும் நெற்செய்கையில் புதுமையையும் வளர்ச்சியையும் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடனும் சம்மாந்துறை-மல்வத்தை விவசாய விரிவாக்கல் காரியாலயத்திட்குட்பட்ட விவசாயி ஐ.எல்.எம் ஜெமீல் என்பவர் நெல் விதையிடு கருவி (Drum seeder) ஒன்றையும் அதற்கான களையகற்றும் இயந்திரம் (ீறநச றுநநனநச) ஒன்றினையும் அப்பகுதி விவசாயப்போதனாசிரியர்களின் ஒத்துழைப்புடன் கண்டுபிடித்து விவசாயத்துறையில் பாரிய பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளார்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ள களையகற்றும் இயந்திரம் ஆனது பயன்பாட்டிலுள்ள ஏனைய களையகற்றும் இயந்திரங்களை விட வித்தியாசமானதும், சக்தி கூடியதும் இலகுவாக கையாளக்கூடியதுமாக காணப்படுகிறது.

வழமையான களையகற்றும் இயந்திரமானது இரண்டு அடிப்பு, மற்றும் இரண்டு வரிசைகளுடையதாக இருக்கின்றது. இருப்பினும் சம்மாந்துறை விவசாயி கண்டுபிடிப்பிடித்துள்ள இயந்திரம் நான்கு அடிப்புக்கள் உடையதும் நான்கு வரிசைகள் கொண்டதுமாக காணப்படுகின்றது.

ஏற்கனவே விவசாய திணைக்களத்தினால் நெல் விதையிடு கருவியாக அறிமுகப்படுத்தப்பட்ட இயந்திரம் 8 வரிசைகளை இடக்கூடிய இயந்திரமாகும். ஆனால் இந்த விவசாயி ஒரே தடவையில் 12 வரிசையில் நெல் இடக்கூடியவாறு விதையிடு இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ள இவ்வியந்திரங்களை அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளரும் பீடை கொல்லி கட்டுப்பாட்டு சட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான எம்.எப்.எ ஸனீர், விவசாய இயந்திர பாடவிதான உத்தியோகத்தர் எஸ். தவனேசன் மற்றும் சம்மாந்துறை மல்வத்தை விவசாய விரிவாக்கல் நிலையங்களுக்கான நிலைய பொறுப்பதிகாரி எம்.டி.எ கரீம் தலைமையிலான விவசாய போதானசிரியர் குழு நேரில் சென்று தொழிற்பாட்டை ஆராய்ந்தது.

மேலும் எதிர்காலத்தில் விவசாய திணைக்கள பண்ணை இயந்திரங்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டு பரீட்சிக்கப்பட்ட பின் அத்தாட்சிப்படுத்தப்பட்டு உரிய விவசாயிக்கு ஆக்கவுரிமை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளரும் பீடை கொல்லி கட்டுப்பாட்டு சட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான எம்.எப்.எ. ஸனீர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விவசாயி ஐ.எல்.எம் ஜெமீல் கருத்து தெரிவிக்கையில்

களை நாசினிகள், கிருமி நாசிகளை தவித்துக் கொள்வதற்காகவே நான் இவற்றை கண்டுபிடித்துள்ளேன். இதை அனைவரும் எடுத்து செயற்படுத்தினால் நெற்பயிர்ச் செய்கையின்போது களை இல்லாமல் ஆக்கலாம், கிருமி நாசினிகள் தெளிப்பதை குறைக்கலாம்,

விதை நெல்லை 50% குறைக்கலாம், உற்பத்தி செலவையும் குறைக்கலாம் “ என நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர் வரும் காலங்களில் இயந்திரம் மூலமாகவே நெல் விதையிடு கருவியை பயன்படுத்தி ஒரு நாளைக்கு சுமார் 3ஏக்கர் ,4 ஏக்கர் விதையிடும் கருவியை உருவாக்கவுள்ளதாகவும், அதுவே என்னுடைய கனவு என்றும் தெரிவித்தார்.

அத்துடன் விவசாய திணைக்களம் கூறுவதை போன்று என்னால் வடிவமைக்க முடியும். இந்த நாட்டு பிரஜை என்ற ரீதியில் நாட்டுக்காகவும் விவசாயிகளுக்காகவும் எனது கண்டுபிடிப்புக்களை மேற்கொள்கிறேன்.எனவும் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பயணக் கட்டுப்பாடுகள் உள்ள சந்தர்ப்பத்திலும், தளர்த்தப்படுகின்றபோதும் மிகுந்த சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டும்!



**(எம்.ஏ.றமீஸ்)**

கல்முனைப் பிராந்தியத்தில் நாளுக்கு நாள் கொவிட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் உயர்வடைந்து வருவதனால், பயணக் கட்டுப்பாடுகள் உள்ள சந்தர்ப்பத்திலும், பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றபோதும் மிகுந்த சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டும்.

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த 24 மணி நேரத்தினுள் 58 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நிந்தவூர் பிரதேசத்தில் 11 தொற்றாளர்களும், கல்முனை வடக்கு, இறக்காமம் மற்றும் அக்கரைப்பறு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவுகளில் தலா ஐந்து தொற்றாளர்களும், சம்மாந்துறை பிரதேசத்தில் நால்வரும், நாவிதன்வெளி மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவுகளில் தலா மூவரும் என கடந்த 24 மணி நேரத்தில் 58 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கல்முனைப் பிராந்தியத்தில் அதி வேகமாக கொவிட் தொற்று பரவி வருவதனால் இப்பிராந்தியத்தில் மிக இறுக்கமான சுகாதார நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இப்பிராந்தியத்தில் உள்ள மக்கள் தத்தமது சுகாதார நடைமுறைகளை தாமாக முன்வந்து நடைமுறைப் படுத்த வேண்டும். பிறருக்கு அஞ்சி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுபோல் பாசாங்கு செய்வதால் கொரோன நோயினை இப்பிராந்தியத்தில் இருந்து போக்க முடியாது. மக்கள் அனைவரும் தமது உயிரையும் பிறறின் நன்மையினையும் கருத்திற் கொண்டு தாமாக சிந்தித்து செயற்படுவதன் மூலமாகவே கொவிட் தொற்றினை முற்றாக அழிக்க முடியும் என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மேலும் தெரிவித்தார்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

# சம்மாந்துறையில் சுகாதார துறையினர் அதிரடி நடவடிக்கை



**(வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஐ.எம்.கபீர் தலைமையிலான சுகாதாரத்துறையினர் இராணுவம் மற்றும் பொலிசாரின் ஒத்துழைப்புடன் அதிரடி சோதனை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றனர்.

அதன்போது பயணத்தடையை மீறி செயற்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டதோடு அன்ரிஜன் மற்றும் பிசிஆர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.எ.றாசிக் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் முருகேசு ராஜ்குமார் உள்ளிட்ட குழுவினர் இச்சோதனை நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அங்கு முறையான அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வியாபாரம் செய்த கடைகள் சீல் வைக்கப்பட்டதுடன் பிசிஆர் சோதனையும் செய்யப்பட்டது.

வீதியில் இருந்து வியாபாரம் செய்தவர்களின் அனுமதி இரத்து செய்யப்பட்டதுடன் பிசிஆர் சோதனையும் செய்யப்பட்டது.

முறையான காரணம் இல்லாது பயண தடையை மீறி பயணம் செய்தவர்கள் பிசிஆர் மற்றும் அன்ரிஜன் சோதனையும் செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டனர்.